# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 06 கணை: 36 மே - 2025



Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

திரு. ஞா.கயூரன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**

gurusеththiram@gmail.com



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


## உள்ளே...


காட்சியும் கருத்தும் 1

ஆசிரியர் பார்வையில்... 2

'குருசேத்திரம்' வெற்றிகரமான 5 ஆண்டுகாலப் பயணத்தில்... 4

குருசேத்திரம் – அறிவின் ஒளி பரப்பிய பயணம் 5

ஆய்வு – இடைவெளிகள் 6

சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும் 9

நினைவு, நீதி, நம்பிக்கை 12

"இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 27 14

Buster Douglas: The Power of Perseverance 15

சமத்துவம் 16

இளமை 16

Dhora 'WIN' வரிகள் 17

உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள் 18

இணையமெனும் தங்கக்கூடு 19

வெற்றியின் தொடர்ச்சியில் ஆசான் 19

கதை வழி அற மொழி 20

பேசும் படங்கள் 21

# காட்சியும் கருத்தும்

கலாநிதி சு.பரமானந்தம்

யார் காரணம், எவ்வாறு நடந்தது அறிவார்ந்த செயற்பாடல்ல...





இவை நிகழாமல் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படுவதே அறிவார்ந்த சமூகம்.

# ஆசிரியர் பார்வையில்...




குருசேத்திரம் களம் 6 இன் 36 வது இதழாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடையும் அதேவேளை புதிய வாசகர்களுக்காகவும் படைப்பாளிகளுக்காகவும் "குருசேத்திரம்" ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை சுருக்கமாக பதிவிடுகின்றேன். கோவிட் 19 இன் தாக்கம் பல் வேறுஇயங்குதளங்களை முடங்கிய சந்தர்ப்பம்... பலரும் பலவிதமான சிந்தனைக் கோலங்களை மக்கள் கொண்டிருந்தனர். எமது கல்வியியற் கல்லூரியும் முடங்கிய நிலையில் மாணவ அசிரியர்கள் வீடுகளில் முடங்கியிருந்தநிலையில் அவர்களை கல்வி தொடர்பான, அறிவியல் தொடர்பான, ஆசிரியர் கல்வி தொடர்பான சிந்தனைக்கிளறல்களை ஏற்படுத்தும் முகமாகவும் மே 18 ஆம்திகதியை மீள்எழுச்சிக்கான தினமாக பீனிக்ஸ் பறவையை உருவகப்படுத்தி "குருசேத்திரம் நிகழ்நிலைச் செயற்பாடுகள் 2020 மே மாதம் 18 ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்று 5 வருடங்கள் நிறைவு பெற்று ஆறாவது வருடத்தில் இவ்விதழ் வெளிவருகின்றது. நிகழ்நிலைச் செயற்பாடுகள் சில நடைமுறைச் சவால்களினால் தற்காலிகமா இடைநிறுத்தப் பட்டாலும் இவ் இலத்திரனியல் சஞ்சிகை குழும உறுப்பினர்களின் விடாமுயற்சியினாலும் அர்ப்பணிப்பினாலும் இப்போது மாத இதழாக தொடர்ந்தும் வெளிவருவதையிட்டு மகிழ்சியடைவதுடன் ஆசிரிய கல்வியியலாளர்கள் திரு.நா.அம்பிகைபாகன், திரு.ம.நிரேஸ்குமார், திரு.ஞா.கயூரன் அவர்களுக்கும், குருசேத்திரம் குழும உறுப்பினர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

குருசேத்திரம் "சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே" என்ற மகுடவாக்கியத்துடன் பல கோட்பாட்டறிவுகளையும், பட்டறிவுகளையும் வழங்கியதன் மூலம் கல்விப்புலம் சார்ந்தவர்களும் சமூக ஆர்வலர்களும் சிறு சிறு அருட்டல்களை ஏற்படுத்தி வருவதுடன் பல நூற்றுக்கணக்கான படைப்பாளிகளையும் உருவாக்கி வருகின்றது என்பதையும் பல ஆயிரக்கணக்கான வாசகர்களையும் கொண்டிருப்பதுடன் இவ்விதழ் பல நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருந்துவருகின்றதென்பதை பெருமையுடன் பதிவிடுகின்றேன்.

ஒரு சமூக உறுப்பினர் என்ற வகையில் எமது இனத்தின், மொழியின் இருப்புக்காக எவ்வாறான பங்களிப்பினை வழங்கி வருகின்றோம் என்பதையிட்டு ஒவ்வொருவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். பொதுவாக வழளைவின் மீதான நடவடிக்கை எடுப்பதை தவிர்த்து ஒரு "பிறழ்வான நடத்தை ஏற்படாதிருக்க" எவ்வாறான முன்னெச் சரிக்கை, முற்பாதுகாப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டு மென்பதே கல்வியூடான அறிவூட்டலுக்கு அடிப்படையாக அமைய வேண்டும்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களிற்கு முன்னும் பின்னும் ஒற்றுமையின் அவசியம் பற்றி அதிகம் பேசப்படும் சுமார் 50 இற்குட்பட்ட அரசியல் தலைவர்களினாலேயே ஒற்றுமை ஏதோவொரு சுயம் சார்ந்த காரணிகளினால் "ஒற்றுமை" குலைக்கப்பட்டுவருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. சமூகம் சார்த பொது நோக்கத்திற்காக போராடுவதாகக் கூறிக் கொண்டு தனிப்பட்ட நலன்களுக்காக, அல்லது ஒரு சிலரின் நலன்களிற்கான போராடுவது யாவரும் அறிந்ததே. யோகர் சுவாமிகள் பல தசாப்தங்களுக்கு மன் கூறிய ஒரு வாசகத்தை இங்கு பதிவிட விரும்புகின்றேன். தமிழர்சார்ந்த கட்சி பிளவுபட்ட போது அவர் தமிழன் "வேட்டியைக் கிழித்துக்கட்ட ஆரம்பித்து விட்டான்"….. என கூறினார். அதாவது ஒரு கட்சி இரண்டாகி, பின் மூன்றாகி இன்று பலவாகிப்போயுள்ளதை யாவரும் அறிந்ததே. ஆகவே வேட்டியை தொடர்ந்தும் கிழித்துக்கட்டு வதைத் தவிர்த்து "தைத்துக் கட்டுவதன்" மூலமே எமது சமூகத்தினை குறிப்பாக கிராமியமட்ட சமூக பொருளாதாரக் கட்டமைப்பினை மேம்படுத்தி வெற்றிபெற்ற சமூகமாக மீள் எழுச்சி பெறலாம். இங்கு முக்கியமாக கவனத்திலெடுக்வேண்டிய விடயம் ஒரு சில மேல்வர்க்கத்தினரின் தீர்மானமெடுத்தலில் தனிநபர் பொருளாதாரநலன்களும், சமூகஅந்தஸ்து மேம்பாடுமே காணப்படுகின்றது. ஆக இன்றுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் "கிழித்த வேட்டிகளை தைத்துத்துக் கட்டுவதற்கான சந்தர்ப்பமாகும். ஆகவே அரசியல் புலம் சார்ந்தவர்களும் அழுத்தம் கொடுக்கக்கூடியவர்களும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தீர்வுகள் நம்மிடமே அல்லது நம் மனங்களி லேயே வைத்துக்கொண்டு நாம் மற்றவர்களிடமே தேடுகின்றோம்.

அதேவேளை இன்று "விபத்துக்கள்" இன்னுமொரு பேசு பொருளாகவும், பாலியல் தொர்பான பிறழ்வான நடத்தைகள் பற்றிய செய்திகள் "வியாபார நோக்கில் விவரண அடிப்படை யில்" சமூக ஊடகங்களில் பதிவேற்றுப்படுவதையும் அது விரைவாகப் பகிரப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவு ள்ளது. இவை தொடர்பாக சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இவ்விடயம் எமது குடும்பத்தில் நடந்தால் அவற்றைப் பெயர்கள், மற்றும் படங்களுடன் பகிர்வோமா? என்பதை சிந்திக்க வேண்டும்.


சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே ஆரம்பிக்கட்டும்…


மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை..

என்றும் அன்புடன்,
சு.பரமானந்தம்.
**PhD in Education**

# ‘குருசேத்திரம்’ வெற்றிகரமான 5 ஆண்டுகாலப் பயணத்தில்...













# குருசேத்திரம் – அறிவின் ஒளி பரப்பிய பயணம்

**18.05.2020 முதல்...**

கொரோனா காலத்தில் கடினமான சூழ்நிலையை ஒளியுடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொண்டோம். அப்போது, 2020 மே 18ஆம் தேதி, யாழ் தேசியக் கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி சுப்ரமணியம் பரமானந்தம் அவர்களின் ஆலோசனை மற்றும் தலைமையில் கல்வி ஆர்வலர்கள் மாணவர்கள் இணைந்து தொடங்கிய ஒரு தீவிரமான சமூகமாற்றத் திற்கான முயற்சி தான் “குருசேத்திரம்”.

இம்முயற்சி, குழுமத்தின் தனிமையைத் தாண்டி சமூகத்துடன் இணைய, அறிவு பகிர்வு, மனதளவிலான ஊக்கம், மற்றும் புதிய சிந்தனைகளுக்கான ஊக்குவிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு மேடையாக உருவெடுத்தது.

குருசேத்திரம் வாயிலாக பல துறைகளைச் சேர்ந்தவர்கள் ஒரே மேடையில் ஒன்றாகினர்:

- கல்வி தலைவர்கள்
- திட்டமிடல் வல்லுநர்கள்
- நிர்வாகிகள் மற்றும் கல்விக் கொள்கையாளர்கள்
- இசை இயக்குனர்கள் மற்றும் பாடகர்கள்
- விவாதக் குழுத் தலைவர்கள்
- போட்டித் தேர்வு வழிகாட்டுநர்கள்
- வைத்தியர்கள் என பெருந்தொகையானவர்கள்

இது ஒரு வழக்கமான நிகழ்வாக மட்டுமல்ல் ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு 8.00 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்ற இணையவழி அறிவாற்றல் அமர்வுகள் இவை. இவ்வமர்வுகள் 100 க்கு மேற்பட்ட Zoom கூட்டங்களாக நடைபெற்றுள்ளன, ஒவ்வொன்றிலும் 300 வரையிலான பங்கேற் பாளர்கள் தொடர்ந்து கலந்து கொண்டு, தங்கள் அனுபவங் களையும் சிந்தனைகளையும் பகிர்ந்துள்ளனர்.

இந்த அமர்வுகள் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் ஒரு ஞான ஒளிக்கதிராக இருந்து வந்துள்ளன. கல்வியை மட்டுமல்லாது, கலை, பண்பாடு, ஒழுக்கம், சமூக விழிப்புணர்வு உள்ளிட்ட பலதரப்பட்ட துறைகளும் இங்கே பேசப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடலினூடாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 50 மடிக்கணிணிகள் பெறப்பட்டு மாணவர்களின் தகவல் தொழிநுட்ப அறிவு மேம்பட்டது. அத்துடன் பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான உதவிகள் பெறப்பட்டு கல்லூரியில் தோட்டம் அமைக்கப்பட்டு இன்றும் பயன்பெறத் தக்கதாகக் காணப்படுகின்றது.

இம்முயற்சியில் பங்கேற்ற ஒவ்வொரு முன்மாதிரியானவர் களுக்கும், நம் இதயப்பூர்வமான நன்றியும் வாழ்த்துகளும் உரித்தாகும்.

இன்று குருசேத்திரத்தின் தொடக்க நாளை நினைவுகூரும் இந்நாளில், நாம் கடந்து வந்த பாதையைக் கொண்டாடுவோம். இன்னும் பலரையும் அறிவின் வெளிச்சம் நோக்கி அழைத்துச் செல்லும் பொறுப்புடன், இப்பயணத்தை தொடர்ந்து கொண்டு செல்ல உறுதியெடுப்போம்.

***நா. அம்பிகைபாகன்***
***இணை ஆசிரியர்***
***குருசேத்திரம் குழுமம்***

# ஆய்வு – இடைவெளிகள்

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

**- கலாநிதி சு.பரமானந்தம் -**




## 2. பிரயோக அறிவு-இடைவெளி (Practical Knowledge Gap)

பிரயோக இடைவெளி என்பது கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் இடையில் ஒரு முரண்பாடு இருக்கும்போது பிரயோக இடைவெளி எழுகிறது, இந்த இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும் கோட்பாட்டு கண்டுபிடிப்புகளை நடைமுறையில் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும் மேலும் ஆய்வு நடத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு பிரயோக இடைவெளி, நடைமுறை-அறிவு இடைவெளி அல்லது செயல்-அறிவு-மோதல் இடைவெளி என்றும் அழைக்கப்படுகிறது.

ஆய்வுச் செயற்பாடுகளில் பிரயோக அறிவு இடைவெளி என்பது, கல்விச் செயற்பாடுகளில் கோட்பாட்டு அறிவுக்கும் நிஜ உலக பயன்பாட்டிற்கும் இடையில் இடைவெளி இருக்கும் சந்தர்ப்பங்களைக் குறிக்கிறது. ஆய்வு முடிவுகள், விதந்துரைப்புக்கள் அல்லது கோட்பாட்டு ரீதியான விடயங்களை முன்வைக்கும் போது இந்த வகையான இடைவெளி ஏற்படுகிறது, ஆனால் இந்த கண்டுபிடிப்புகளை எவ்வாறு திறம்பட பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்துவது என்பதற்கான சான்றுகள் அல்லது வழிகாட்டுதல்கள் இல்லாதது எமது கல்விசார் கட்டமைப்புக்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது செய்யப்படும் ஆய்வுகளில் இருந்து பெறப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது கொள்கையாக்கத்திற்கு பிரயோகிப்பதற்கான நிறுவனம் சார் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளது. ஆசிரியர் கல்வியில் இலங்கையைப் பொறுத்தளவில் வருடாந்தம், நூற்றுக்கணக்கான ஆய்வுகள் பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேவை கருதி அதாவது பாடநெறியைப் பூர்த்தி செய்வதற்காக அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் ஆய்வு நடத்தப்படுவதோடு அல்லது ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள் அல்லது கொள்கை வடிவமைப்பாளர்களுக்கான செயலுபாயங்களாக அந்த கண்டுபிடிப்புகளை நடைமுறைப்படுத்தாமையால் நடைமுறையில் பிரயோக அறிவு இடைவெளிகள் பெரும்பாலும் எழுகின்றன.

கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் நடத்தப்படும் தத்துவார்த்த பணிகளுக்கும் கள செயல்படுத்தலுக்கும்

இடையிலான வேறுபாட்டிலிருந்து இந்த நடைமுறை இடைவெளிகள் எழுகின்றன. இந்த இடைவெளிகளை திறம்பட நிரப்புவது, ஆய்வுக் கண்டுபிடிப்புகள் நடைமுறையில் நிஜவாழ்க்கைப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய பயன்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

## கல்வியில் பிரயோக அறிவு இடைவெளிகளுக்கான உதாரணங்கள்:

1. **குறைந்த வள வகுப்பறைகளில் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல்**

நடைமுறை அறிவு இடைவெளி: கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் செயல்திறன் குறித்து கணிசமான ஆய்வுகள் வெளிவந்தாலும், குறைந்த வளங்களைக் கொண்ட வகுப்பறைகளில், குறிப்பாக பின்தங்கிய பிரதேச அல்லது கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் தொழில்நுட்பத்தை எவ்வாறு திறம்பட ஒருங்கிணைப்பது என்பது குறித்த வழிகாட்டுதல் குறைவாகவே உள்ளது.

குறைந்த வளங்கள் காணப்படும் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் பெரும்பாலும் உட்கட்டமைப்பு இல்லாமை, வரையறுக்கப்பட்ட இணைய அணுகல் மற்றும் போதுமான பயிற்சி இல்லாதது போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர், இது தொழில்நுட்ப அடிப்படையிலான உத்திகளை திறம்பட செயல் படுத்துவதை மட்டுப்படுத்துகின்றது. (வார்ஷவுர், 2006).

2. **உள்ளடக்கல் வகுப்பறைகளில் பன்முகத்தன்மை கொண்ட மாணவர்களுக்கான வேறுபட்ட போதனாத்துவ வழிமுறைகள்**

நடைமுறை அறிவு இடைவெளி: பலதரப்பட்ட மாணவர்களுக்கு வெவ்வேறு போதனாத்துவ வழிமுறைகளின் (DI) பயன்களை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகிறது எனினும் வெவ்வேறு தேவைகளைக் கொண்ட மாணவர்களை உள்ளடக்கிய வகுப்பறைகளில் (உ-ம்: மெல்லகற்போர் - மீத்திறன் மாணவர்கள், உடல் குறைபாடுகள் உள்ள மாணவர்கள், சாதாரண மாணவர்கள்) வெவ்வேறு போதனாத்துவ வழிமுறைகளின் செயல்படுத்த ஆசிரியர்களுக்கு நடைமுறைரீதியான செயலுாயங்களை நடைமுறைப்படுத்துவதில்லை அல்லது குறைவான நிலையில் காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் பெரும்பாலும் பலதரநிலை மாணவர்களுக்கு வெவ்வேறு போதனாத்துவ வழிமுறைகளின் (Differentiate Instruction) கோட்பாட்டை நிஜ உலக வகுப்பறைச் சூழல்களில் நடைமுறைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். குறிப்பாக பல்வேறு மாணவர் குழுக்களை நிர்வகிக்கும் போது இவ்வாறான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (டாம்லின்சன், 2014).

3. **ஆசிரியர் செயற்பாடுகளின் மூலம் பாடசாலைகளில் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தல்.**

பிரயோக அறிவு இடைவெளி: பாடசாலைகளில் மாணவர்களின் உள ஆரோக்கியத்தை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை ஆய்வுகள் அடிக்கோடிட்டுக் காட்டினாலும், ஆசிரியர்கள் தங்கள் அன்றாட கற்பித்தல் நடைமுறைகளில் உளநல மேம்பாட்டை எவ்வாறு இணைக்க முடியும் என்பது பற்றிய செயற்பாட்டு அறிவில் இடைவெளி காணப்படுகின்றது.

கல்வியில் உளநலத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை அதிகரித்து வருகின்ற போதிலும், உளநல பாதிப்புக்களை அடையாளம் காணவும், அவர்களின் பாடத்திட்டத்தில் தேவையான நடைமுறைகளை ஒருங்கிணைக்கவும் சாத்தி

யமான நடைமுறை நுட்பங்கள் மற்றும் செயலுபாயங்கள் ஆசிரியர் களிடம் இல்லாமல் அல்லது குறைவாக இருக்கலாம் (கிரீன்பெர்க் மற்றும் பலர், 2016).

**4. வாசிப்பு மற்றும் எழுத்தறிவு தலையீடுகளை அளவிடுதல்**

பிரயோக அறிவு இடைவெளி: வாசிப்பில் இடர்படும் மாணவர்களுக்கு பயனுள்ள எழுத்தறிவு தலையீடுகள் குறித்து விரிவான ஆய்வகள் உள்ளது, ஆனால் பல்வேறு, பெரிய அளவிலான பாடசாலை அமைப்புகளில், குறிப்பாக நகர்ப்புற அல்லது குறைவான செயல்திறன் கொண்ட பிரதேசங்களில் இந்த தலையீடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது மற்றும் அளவிடுவது குறித்த வழிகாட்டுதல் குறைவாகவே உள்ளது.

வாசிப்புத்திறன் மேம்பாடு போன்ற திட்டங்கள் நேர்மறையான முடிவுகளைக் காட்டினாலும், முழு பாடசாலைகளிலும் அல்லது பிரதேசங்களிலும் இத்தகைய தலையீடுகளை எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் நிலைநிறுத்துவது என்பது குறித்த நடைமுறை அறிவு கல்வியளாலர்களுக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும்பாலும் இல்லை அல்லது திருப்திமட்டத்திலும் குறைவாகக் காணப்படுகின்றது. (Foorman et al., 2016).

**5. ஆசிரியர் தொழில்முறை மேம்பாடு மற்றும் வகுப்பறைகளில் அதன் பயன்பாடு**

பிரயோக அறிவு இடைவெளி: ஆசிரியர் தொழில்முறை மேம்பாட்டிற்கான (PD) பயனுள்ள செயலுபாயங்கள் மற்றும் நுட்பங்களை ஆய்வுகள் அடையாளம் கண்டுள்ளது, ஆனால் ஆசிரியர்களின் அன்றாட வகுப்பறைச் செயற்பாடுகளில் PD ஐ எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்த போதுமான பிரயோக அறிவு இல்லை அல்லது திருப்தி மட்டத்திலும் குறைவு, குறிப்பாக கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளில் நீடித்த மாற்றங்களை ஊக்குவிக்கும் வழிகளில் தலையீடுகள் மிகக் குறைவாகக் காணப்படுதல்.

தொழில்வாண்மை மேம்பாடு பெரும்பாலும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகக் கருதப்படுவதில்லை, ஆனால் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறைகளில் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்துவதற்கான செயல்முறைகள், தொடர்ச்சியாக மேற் கொள்வதற்கான வசதிகள், மற்றும் தொழில்நுட்பக்கருவிகளின் தேவை முக்கியமானது. (Desimone & Garet 2009).

**6. பெரிய வகுப்பறைகளில் உருவாகுநிலை கணிப்பீட்டு (Formative Assessment) நடைமுறைகள் மற்றும் பின்னூட்டல்கள்:**

பிரயோக அறிவு இடைவெளி: மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்கு உருவாகுநிலை (Formative) கணிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் பின்னூட்டல்கள் முக்கியம் என்றாலும், மாணவர் எண்ணிக்கை கூடிய பெரிய, பன்முகத்தன்மை கொண்ட வகுப்பறைகளில் இந்த உத்திகளை எவ்வாறு திறம்பட செயல்படுத்துவது என்பது குறித்த நடைமுறை ஆலோசனைகள் குறைவாகவே உள்ளன.

மாணவர் எண்ணிக்கை கூடிய பெரிய வகுப்புகளில் உள்ள ஆசிரியர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு மாணவருக்கும் அர்த்த முள்ள கருத்துக்களை வழங்குவதில் சிரமப்படுகிறார்கள், இது மாணவர் செயல்திறனை மேம்படுத்துவதற்கான உருவாகுநிலை கணிப்பீட்டில் குறிப்பிடத்தக்க நன்மைகள் இருந்தபோதிலும், அதனை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தாமை கற்றலின் விளைதிறனைக் குறைக்கலாம். (பிளாக் & வில்லியம், 1998).




# சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும்

4

- கலாநிதி கி.புண்ணியமூர்த்தி LLB-

மிகவும் சிக்கலான மற்றும் ஆற்றல்மிக்கதாக மாறிக் கொண்டிருக்கும் நவீன சமுதாயத்தில் வெற்றிபெற, மாணவர்களது பேரறிகைத்திறன்களை விருத்திசெய்ய முயற்சித்தல் வேண்டும். உயர் செயல்திறன் கொண்டவர்கள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் அதிக தேர்ச்சி பெற்றவர்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகள், ஆண் மாணவர்களுடன் ஒப்பிடும் போது பெண் மாணவர்கள் மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது.

செவிமடுப்பது மட்டுமே கற்றல் முறையாக இருக்கும் இன்றைய வகுப்பறைகளில் அதிக சகிப்புத்தன்மை கொண்ட பெண்கள் சிறப்பாகச் செயல்படுவதில் ஆச்சரியமில்லை. பார்த்து அல்லது செய்வதன் மூலம் சிறப்பாகக் கற்கும் ஆண் மாணவர்கள் கேட்பதை விரும்பத்தகாத அனுபவமாகக் காண்கிறார்கள். மாணவர்களின் கற்றலை மேம்படுத்தச் சர்வதேச நாடுகள் பல நுண்ணறிவுக் கோட்பாடுகளைப் பரிசீலித்து வரும் இவ்வேளையில், கற்பவர்களுக்குச் செவிப்புலன், காட்சி மற்றும் தொட்டுணரக்கூடிய மூன்று முக்கிய வகைகளில் போதிய கவனம் செலுத்துவதற்கு நமது கல்வி முறை எதிர்கொள்ளும் சிரமங்கள் உண்மையில் வருத்தமளிக்கின்றன.

ஆண் குழந்தைகளின் ஆளுமையை வளர்த்துக் கொள்ள அதிக ஆண் ஆசிரியர்களின் தொடர்பும் தேவை. நமது பாடசாலைகளில் பெண் ஆசிரியர்கள் ஆண் ஆசிரியர்களை விட அதிகமாக இருப்பதும், இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இலங்கையில் பெண் ஆசிரியர்கள் 76 சதவீதமாகவும் (236738) ஆண் ஆசிரியர்கள் (56817) 24 சதவீதமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலை பாடசாலைக் கல்வியில் காணப்படும் பாலின வேறுபாட்டை மேலும் விரிவடையச் செய்கிறது இதன் மூலம் கற்கும் நாட்டம் கொண்ட மாணவர்கள் இன்றைய கல்வியில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட குழுவாக மாறிவிட்டனர். பல்கலைக் கழக நுழைவுக்குத் தகுதி பெறுவதற்கு அனைத்து மாணவர் களிடமும் ஒரே மாதிரியான கல்வி நோக்குநிலை எதிர்பார்க்கப் படுகின்றது. விமர்சன சிந்தனையில் வலுவில்லாத வலது மூளை மாணவர்களுக்குக் கணிதம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகி ன்றது, கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான ஆய்வு-அடிப்படையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகுமுறைகளில் அனைத்து வகையான கற்பவர்களும் பயனடையலாம். ஆனால் இந்த அணுகுமுறையில் குறைவான கவனம் செலுத்தப்படுகின்றது. இவை வலது மூளை மாணவர்களை மனச்சோர்வடையச் செய்துள்ளது.

தேசத்தின் சொத்தாக இருக்கும் ஆக்கத்திறன் மிக்க வலது மூளை மாணவர்களை, வளர்ந்த நாடுகள், வலது மூளை ஆசிரியர்களுடன் இணைத்து வளர்க்க நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், நமது பாடசாலைகள் அத்தகைய மாணவர்களைப் பாரம்பரிய வகுப்பறை அமைப்புகளில் இடது மூளை மாணவர் களுடன் போட்டியிட நிர்பந்திக்கின்றன. இது அவர்களை நீல ஆடை வேலைகளை (Blue collar jobs) மேற்கொள்வதற்காகப் பாடசாலையைச் சீக்கிரமாக விட்டுவிடும்படி செய்கின்ற செயற்

பாடாகும்.

தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்விக்கான வழிகள் இன்று திறக்கப்பட்டிருந்தாலும், பலர் இன்னும் பாடசாலைக் கல்வியை, வேலை உலகிற்குத் தயார்படுத்துவதற்கான ஒரு வழியாகக் கருதுகின்றனர். எவ்வாறாயினும், பாடசாலைக் கல்வியின் உண்மையான நோக்கம், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தி ற்காக அவர்கள் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கையின் எந்தத் துறையிலும் வெற்றிபெற ஒரு அடித்தளத்தை வழங்குவதாகும். பாடசாலைக் கல்வியை முடிக்கும் மாணவர்களில் பெரும்பான் மையானவர்கள் வேலைவாய்ப்பை நாடுகின்றனர் அல்லது தங்களுக்கு விருப்பமான தொழிலுக்குத் தயாராவதற்கு ஏதேனும் ஒரு தொழிற்கல்வி அல்லது தொழில்முறைக் கல்வித் திட்டத்தில் சேருகின்றனர்.

மாணவர்களில் சிறிய சதவீதத்தினருக்கே பல்கலைக்கழகக் கதவுகள் திறந்திருக்கும் நிலையில் அச்சிறு தொகையினரே உயர்கல்வியைத் தங்கள் எதிர்கால நோக்கமாகத் தேர்ந்தெடுக் கிறார்கள், இன்னும் சிலர், குறிப்பாகப் பெண்கள், இதையெல்லாம் விடுத்துத் தங்கள் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கான கனவுகளை நனவாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். எனினும் அனைத்து மாணவர்களையும் தங்கள் எதிர்காலத்திற்காகத் தேர்ந்தெடுக்கும் பல்வேறு நிலைகளில் வெற்றிபெறச் செய்வதைக் கல்வித்துறை கவனத்தில்கொள்ள வேண்டும்.

புதிய நூற்றாண்டின் முதல் கலைத்திட்ட மறுசீரமைப்பானது 2007இல் மேற்கொள்ளப்பட்டது திருத்தியமைக்கப்பட்ட கலைத் திட்டம் பின்வருவனவற்றை வலியுறுத்தியது

- மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- செயற்பாடு சார்ந்த கற்றல்.
- செயற்றிட்டம் ஒப்படை மூலம் கற்றல்.
- ஆக்கத்திறன், பிரச்சினை தீர்த்தல் திறன்கள், சமூகத் திறன்கள் மற்றும் கற்பனை ஆற்றலை விருத்தி செய்தல்.

- மாணவர்களில் அதிக சுமையைத் தகவல்களின் அடிப் படையில் சுமத்தாது அடிப்படைக் கற்றல் எண்ணக் கருக்களை வழங்குதல்.

தனிப்பட்ட, வீடு, சமூகம் மற்றும் வேலை வாழ்க்கையில் வெற்றிபெறக்கூடிய ஒரு குடிமகனை உருவாக்குவதை நோக்க மாகக் கொண்ட அறிவுறுத்தல், கணிப்பீடு மற்றும் மதிப்பீடு ஆகிய வற்றில் இவ்வாறான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

செயல்பாடு சார்ந்த கற்றலில் வெற்றிபெற, பரிந்துரைக்கப்பட்ட பாடத் தேர்ச்சிகளைப் பல தேர்ச்சி மட்டங்களாகப் பகுக்க வேண்டியிருந்தது, அவற்றை கால அட்டவணையில் ஒற்றை அல்லது இரட்டைப் பாடவேளைகளில் அடையப்படுவதற்கான எதிர்பார்க்கை காணப்பட்டது. ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திலும் ஒரு தேடலுடனான ஒரு செயல்பாடு திட்டமிடப்பட்டிருக்கும். அச்செயற்பாடானது புதிய அறிவையும் அதன் பொருளையும் தேட மாணவர்களை ஊக்குவிக்கும். குழுச் செயற்பாடுகளின்போது குழுக்கள், தங்கள் கண்டுபிடிப்புக்களை முன்வைக்கவும், அவை தொடர்பில் விளக்கமளிக்கவும் வாய்ப்புக்களைப் பெற்றன. மேலும் ஆசிரியர் தமது சொந்த செயல்திறன் உட்பட மற்றவர்களின் செயல்திறன் குறித்துத் தீர்ப்புக்களை வழங்கப் பல்வேறு மதிப்பீடுகளைப் பயன்படுத்தவும், வாய்ப்பளிக்கப் பட்டிருந்தது. இவ்வாறு வகுப்பறையில் ஏதாவது செய்யும் வாய்ப்பைப் பெற்ற மாணவர்கள், முன்முயற்சி, பொறுப்புக்கூறல் அர்ப்பணிப்பு, தொழில்முனைவு, மன அழுத்த முகாமைத்துவம் மற்றும் சுய ஒழுக்கம் போன்ற பல்வேறு தனிப்பட்ட திறன்களை வளர்த்துக் கொள்ள உதவியது.

வேலை செய்யும் போது அவர்களுக்குச் சிந்திக்கக் கிடைத்த வாய்ப்புக்கள், படைப்பாற்றல், விமர்சன சிந்தனை, முடிவெடுக்கும் திறன் மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள உதவியது. அவர்கள் ஈடுபட்டிருந்த குழுப் பணி, ஒட்டுணர்வு, அக்கறை, பகிர்வு, தொடர்பு, தலைமைத்துவம் மற்றும் பின்பற்றுதல் போன்ற சமூகத் திறன்களை வளர்க்க உதவியது. மொத்தத்தில், இந்த வகையான அணுகுமுறை மாணவர்களுக்குத் தனிப்பட்ட மற்றும் உள்ளார்ந்த அம்சங்களை உள்ளடக்கிய பொதுவான திறன்களின் தொகுப்பை உருவாக்க வழி வகுத்தது. இந்தத் திறன்கள், மென்திறன்கள் (Soft Skills) எனக் குறிப்பிடப்படுகின்றன. இவை கற்றல்-கற்பித்தல் செயல்முறை யிலிருந்து பெறப்பட்டவை, கற்றலின் முக்கிய அங்கமாக இன்று வளர்ச்சியடைந்து வந்திருக்கும் மனவெழுச்சி நுண்ணறிவை வளர்க்க மாணவர்களுக்கு இவை உதவுகின்றன.

கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றுக்காக ஏற்றுக்கொள்ளப் பட்ட புதிய வழிமுறையானது, ஆசிரியரது வாழ்க்கைத் திறன்கள் அல்லது விழுமியக் கல்வி போன்ற ஒரு குறிப்பிட்ட பாடத்தின் கீழ் விழுமியங்களைக் கற்பிக்கக் காத்திருப்பதை விட சாதாரண வகுப்பறைக் கற்றல் செயல்பாட்டின் போது விழுமியங்களைப் பெற மாணவர்களுக்கு உதவுகிறது. கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றிற்குப் பின்பற்றப்படும் பல்வேறு முறைகள் இன்று படைப்பாற்றல், விமர்சன சிந்தனை, தகவல் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு (4C) ஆகிய திறன்கள் பிரபலமடைய அனுமதிக்கின்றன. ஏனெனில் இன்று பாடசாலை மாணவர் களிடத்தே இத்திறன்கள் வெற்றிகரமாகப் புகுத்தப்படுகின்றன.

தொடரும்...

# நினைவு, நீதி, நம்பிக்கை
## (ஒரு மௌனப்பாதையின் மொழிகள்)

- Gajooran.G -



*சில வேளைகள் வரலாறு எழுதப்படவில்லை. ஆனால் அது இன்னும் உயிரோடு இருக்கிறது. சில நினைவுகள் சத்தமின்றி கதைகள் சொல்கின்றன. சில குரல்கள் எங்கேயோ ஒலிக்கின்றன, கேட்கத் துணிவில்லாதவர்களுக்குத் தோளில் ஒட்டிக்கொண்டு.*

அந்தக் கதைகளும், அந்தக் குரல்களும், நாம் கேட்டவையாக இருக்கலாம். அல்லது... நாமே சொல்லத் தொடங்க வேண்டியவையாக இருக்கலாம்.

## நினைவு – ஒரு இனத்தின் மௌன குரல்

ஒரு காலத்தில் ஓசை நிரம்பி இருந்தது. பசுமை நிலங்களில் சிறுவர்கள் ஓடி விளையாடிய குரல்கள், வீதி ஓரத்தில் அம்மாவின் அழைப்புச் சத்தம், பாடசாலையின் வகுப்பறை ஓசைகள்...

அவை எல்லாம் இன்று ஒரே ஒரு வார்த்தையாக சுருங்கிவிட்டன – **“முன்னாடி...”**

அந்த “முன்னாடி” என்பது ஒரு நேரத்தைக் குறிப்பதுமல்ல, ஒரு உணர்வைக் குறிக்கிறது. ஒரு இனமாக நாம் என்னவாக இருந்தோம், எவ்வாறு வாழ்ந்தோம் என்பதை நமக்கே நினைவூட்டும் ஒரு பழமையான விளிப்பு.

இப்போது, அந்த நினைவுகள் பசுமையாகவோ, வலியோ இரண்டும் கலந்தவையாகவோ உள்ளன.

ஒரே நேரத்தில் அனைத்தையும், நம்மையும் கிழித்தெறிந்ததையும் கொண்டு வந்த நினைவுகள்.

ஆனால் நாம் அதை அழிக்கவில்லை. மரம் முறிந்தாலும் அதன் நிழலை மனதில் பதித்துக்கொள்கிறோம். நினைவுகளைத் தடுக்க இயலாது. அவை நாம் வாழும் வரை நம்முள் வாழும்.

## நீதி – எங்கேயோ தொலைந்து போன தேடல்

ஒரு வீட்டில் ஒருவர் இல்லாதபோதும், அவர் இருக்க வேண்டிய இடத்தில் இன்னும் ஒரு நிழல் தொங்கிக்கொண்டே

இருக்கும். அதைப் பார்க்க யாரும் தயாராக இல்லாதபோதும், அதை உணராமல் இருப்பது முடியாத ஒன்று.

அதேபோல், சில கதைகள், சில நிகழ்வுகள், சில நாட்கள், சில பெயர்கள்... இவை எல்லாம் நீதியின் தேடலில் ஒளிந்திருக்கும் குறியீடுகள்.

அவைகளைப் பற்றி நம்மிடம் கேட்கக்கூடாது என்பதுபோல ஒரு மௌனம் கட்டப்பட்டுள்ளது.

ஆனால் அந்த மௌனம், நம் உள்ளத்தில் ஒரு குரலாகவே ஒலிக்கிறது.

நீதி என்றால் வெறும் சட்டம் அல்ல. அது உணர்வின் ஒழுக்கம்.

“ஏன்?” என்று கேட்ட கேள்விக்கு “அதற்கான பதிலை நாம் தரவேண்டும்” என்று நம்முள் ஒரு உணர்வு நிழலாக வளர்கிறது.

தலைமுறைகள் மாறினாலும், அந்தக் கேள்விகள் தொடர்ந்து முளைக்கின்றன. ஏனெனில் உணர்வுகள் சாய்ந்துபோகாதவை.

## நம்பிக்கை – நிஜத்தின் இடுக்குகளில் மலரும் கனவு

வேர்கள் இறந்த இடங்களில் கூட புதுமை மலரும். அதை நிரூபிக்க, நம்மையே எடுத்துக்கொள்ளலாம்.

சிலர் கண்களில் இன்னும் இரவுகள் நிலவுகின்றன. ஆனால் பலர் மனதில் காலைதான் பசுமையாக பொலிவதைக் காண்கிறோம்.

பாடசாலை மீண்டும் திறக்கிறது. புதிய புத்தகங்கள் வாசிக்கப்படுகிறது. பாடல் எழுதப்படும். குழந்தை ஓவியங்கள் சுவர்களில் ஒட்டப்படும்.

இந்த நிமிடங்கள் எல்லாமே நம் எதிர்காலத்தின் மெல்லிய அடையாளங்கள்.

நாம் வாழ்ந்தோம் என்பது போதாது. நாம் வாழ்கிறோம் என்பதையும் நிரூபிக்க வேண்டிய தருணம் இது.

அதற்காக எழுதி வரும் அத்தனை பக்கங்களும், குரல்கள், கண்கள், புன்னகைகள்... அனைத்தும் நம்பிக்கையின் முகமாகவே பார்க்கப்படுகின்றன.

நமது மக்கள் இன்னும் எதிர்காலம் மீது ஒரு நம்பிக்கையைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அது தான் நம் இனத்தின் உண்மையான வெற்றி.

## நம்முள் மீண்டும் ஒளிரும் மூன்று வார்த்தைகள்

- நினைவு – எதையும் மறக்காத மனம்.
- நீதி – எப்போதும் எதிர்பார்க்கும் விழிகள்.
- நம்பிக்கை – நாளைய பசுமை.

இந்த மூன்றும் நம்முள் மட்டும் இருக்கவேண்டியவை அல்ல. அவை பேசப்பட வேண்டும்... நேரடியாக இல்லையெனில் நுணுக்கமாக.

ஒரு எழுத்து, ஒரு குரல், ஒரு ஓவியம், ஒரு பாடல்... எந்த வடிவத்தில் வந்தாலும் சரி, உணர்வு உண்மையாக இருந்தால், அது ஒரு சமூகத்தின் மறக்க முடியாத குரலாகவே வாழும்.

நாம் அந்தக் குரலை வாசிக்கச் செய்யும் பக்கம் இது. அதனால் தான் எழுதப்படவேண்டிய கட்டுரை இது.

## “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 27

## கதைகளால் நியமாகி...





பூமியில் உள்ள எல்லா மனிதர்களும் ஒரு காலத்தில் கடவுளர்களாகவே இருந்தனர். அதனால் அவர்கள் தமது சக்தி, திறன்கள், ஆற்றல்களை தவறாக பயன்படுத்த முற்பட்டனர். அதனால் பிரம்மா இந்த கடவுள் தன்மை என்ற முழு சக்திகளையும் அவர்களிடமிருந்து பறித்து எவராலும் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் மறைத்து வைக்க முடிவு செய்தார்.

எங்கே ஒளித்து வைப்பது என்று பலரிடமும் ஆலோசனை கேட்கப்பட்டது. ஒரு ஆலோசகர் அதை பூமியின் ஆழத்தில் புதைத்து வைக்கலாம் என்றார். அந்த கருத்து பிரம்மாவிற்கு பிடிக்கவில்லை ஒரு நாள் மனித இனம் ஆழமாகத் தோண்டி அதை கண்டுபிடித்து விடும் என்று கூறினார். இன்னொரு ஆலோசகர் கடலின் நடுவில் ஆழத்தில் புதைத்து வைக்கலாம் என்றார். பிரம்மா அதையும் ஏற்க மறுத்துவிட்டார். அதையும் மனிதர்கள் ஒருநாள் கடலின் ஆழத்திற்கு போய் கண்டுபிடித்து விடுவார்கள் என்றார். இன்னொரு ஆலோசகர் மலையின் உயரமான உச்சியில் ஒளித்து வைக்கலாம் என்றார். அதையும் பிரம்மா ஏற்றுக்கொள்ளவில்லை ஏனெனில் மனிதன் ஒரு நாள் மலையின் உச்சியில் ஏறும் வழியை கண்டுபிடித்து அதையும் எடுத்துக் கொள்வான் என்றார். அதைப் பற்றி அமைதியாக சிந்தித்த பிரம்மா அந்த மிகவும் உயர்ந்த அன்பளிப்பை ஒழித்து வைக்கும் இடத்தை கண்டுபிடித்தார். இதோ அவர்களுக்கு விடை கிடைத்துவிட்டது. அதை மனிதர்களின் உள்ளே ஒளித்து வைக்கலாம் அங்கே தேட வேண்டும் என்று நினைத்து கூட பார்க்க மாட்டார்கள்.

**நீதி – திறமையும் சக்தியும் உங்களுக்குள்ளே தான் இருக்கிறது.**

# Buster Douglas: The Power of Perseverance

- Nekesan Paramanantham –



In the late 1980s, Mike Tyson was the most feared boxer in the world. With a perfect record of 37 wins, 33 by knockout, he was the undisputed heavyweight champion. His aggressive style and early-round knockouts made him seem invincible.

On February 11, 1990, Tyson faced James "Buster" Douglas in Tokyo. Douglas, ranked seventh among heavyweights, was a 42-to-1 underdog. Few gave him a chance, but Douglas was fueled by determination and personal tragedy—his mother had passed away just 23 days before the fight .

From the opening bell, Douglas showcased his hard work and preparation. He used his jab effectively, keeping Tyson at bay and controlling the pace. In the eighth round, Tyson landed a powerful uppercut that knocked Douglas down. But Douglas rose before the count ended, demonstrating resilience and an unyielding spirit.

In the tenth round, Douglas unleashed a flurry of punches, culminating in a right uppercut that sent Tyson to the canvas for the first time in his career. Tyson struggled to his feet but couldn't beat the count. Douglas had achieved the unthinkable—defeating the seemingly unbeatable champion .

After the fight, Douglas dedicated his victory to his late mother, saying, "Because of my mother… God bless her heart." His triumph serves as a testament to the idea that with hard work, dedication, and perseverance, even the most daunting obstacles can be overcome.

***Douglas's story reminds us that success isn't solely determined by talent or odds but by the relentless pursuit of one's goals, even in the face of adversity.***

## சமத்துவம்

மண்ணில் பிறக்கையிலே - நம்
அனைவரும் மனித இனமே!
மாறுபட்டோம் காரணங்களாலே - நம்
பழக்கவழக்கம், பேசும் மொழி வேறாகலாம்
பரிவும் பாசமும் ஒன்றே.

பிறப்பினில் எல்லோரும் சமம் தானே - நம்
உடலில் ஓடும் குருதியும்
ஒரே நிறம் தானே - பின்னே
ஏன் வெள்ளை கறுப்பு,
ஏழை பணக்காரன்,
உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி
வேறுபாடு.....?

புதியதொரு யுகம் படைப்போம்
புதியதொரு வழி செய்வோம்
பேதமில்லா சமத்துவமான
சமூகத்தை உருவாகுவோம் சமத்துவமே
எங்கள் சுவாசக்காற்று
அனைவர் மனதிலும் மகிழ்ச்சி பெருகட்டும்....!!

**சமத்துவம் வாழ்க!**

*செல்வி. கிறிஸ்தீனா நாகேந்திரன்.*
*மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி*

## இளமை

எட்டி பிடித்து நடைபழகி
தடம் பிரண்டு நான் வாழ
சொத்து சுகம் எண்ணமில்லை
பட்டாம்பூச்சி வயதினிலே!



பள்ளி பருவம் வருகையில்
பசி தீர்க்கும் பருந்தானோம்
பல நேசம் கைக்கோர்த்து
படிப்பினை ஆரம்பித்தோம்

முரண்டு பிடிக்கும்
வயது அதில்
வட்டமிடும் சோதனைகள்
அத்தனையும் தகர்த்தெறிந்து
அலை நடுவே!
முத்தானோம்.

கோள் ஊண்றி நான் நடக்க
நான்கு தோள் துணையாகும்
பாரம் என்று கருதாமல்
இறுதி நாள் மலராவோம்.

*பன்னீர்செல்வம் லெட்சுமி*
*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி*

# Dhora ‘WIN’ வரிகள்

## மாற்றம் உன்னிடமிருந்து




இந்த உலகம் அவ்வளவொன்றும் மோசமாகிவிடவில்லை இன்றும் கண்காணாதேசத்தில் தொடரூந்திலிருந்தோ பேரூந்தில் இருந்தோ இறங்கி திரு திருவனந்த விழித்து நிக்கையில் நாம் போகவேண்டிய இடம் பற்றி விசாரித்து வழிகாட்ட இன்னும் மனிதர்கள் இருக்கிறார்கள் கண்களை வைத்தே முன்பின் தெரியாதவரின் பணியினை உணர்ந்து உணவு கொடுக்க யாரோ ஒருவர் இருக்கின்றார் தவறி விழுத்திய பணத்தை தோளில் தட்டி கைகாட்டி எடுக்கச்செய்யவும் யாரோ இருக்கின்றார் குறைந்த பணத்திற்கு பொருளை பேரம் பேசும் நபரின் இயலாமைக்காய் ந'்டமென்றாலும் விலைகளைக் குறைத்து வழங்க மனிதர்கள் இருக்கின்றார்கள் நாம் அழுதுவடிந்து யாரும் பார்க்கும் முன் துடைத்து சிரிக்கும் கண்களை பார்த்தும் புதினம் கேட்காது எமக்காய் இறைவனை மனதிற்குள் பிரார்த்திக்க யாரோ நிச்சயம் இருக்கின்றார் படிப்பிற்கு என்று உதவி தேவைப்படும் போது தானாய் உதவிட யாரோ இருக்கின்றார்கள் வேறுமனே போதைக்கும் துர்'பிரயோகத்துக்கும் தற்கொலைக்கும் மட்டும் இந்த உலகம் இயங்குவதாய் மனதோரம் நெருடல்களுடன் அலையாதீர்கள் இத்தனையயும் பெரிதாக பேசப்படுகிறது வலைத்தளங்களில் அவ்வளவு தான் இலத்திரணியல் சாதனங்களுடன் மட்டும் வாழ்க்கை நடத்துபவர்கள் தற்காலத்தில் மனிதம் பற்றி நேர்மனப்பான்மையுடன் சிந்திப்பது சாத்தியமற்றது தான் ஒரு இரண்டு நாள் கையில் சிறிதளவு பணத்துடன் மட்டும் முகமறியா நபர்களில் இடம் நோக்கிப்பயணித்தால் இதையெல்லாம் உணரலாம் ஆம் இன்னும் மனிதம் வாழ்கிறது உலகை ஆள்கிறது ஆனால் அவை பெரிதாக பேசப்படவில்லை

பேசப்படவில்லை என்பதற்காக மனிதம் இறந்ததாக கொள்ளமுடியாது என்பது உண்மைதான் என்னுள் மனிதம் இருக்கிறதா எனத்தேடிப்பார்த்து திருத்திக்கொள்ள நான் தயாரா என்றகேள்விக்கான பதிலில் உள்ளது மனிதம்

மாற்றம் என்னிடமிருந்து தொடங்கட்டுமே

- டயானா சிவராஜா -

# உலகப் புகழ்பெற்ற ஓவியங்களில் மறைந்திருக்கும் மர்மங்கள் 1

- S.Zeemeennaj -

ஓவியம் கண்ணெதிரே கண்ட காட்சிகளுக்கும் கனவில் தோன்றும் கற்பனை உருவங்களுக்கும் தூரிகைக் கொண்டு உயிர் கொடுக்கும் அதி அற்புதமான கலை நாம் இன்று அழகியல் சார்ந்த செயல்படாக பார்க்கப் படும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரபலமான ஓவியர்களால் பல ரகசியங்களையும் மர்மங்களையும் கலந்து வைக்கும் கலையாகவே இது காணப்பட்டது. அந்த வகையில் பிரபலமான ஓவியங்களில் மறைந்திருக்கும் நம்ப முடியாத சில மர்மங்களை பற்றி பார்க்கலாம்.....



உலகில் புகழ்பெற்ற ஓவியங்களில் ஒன்றான "மோனாலிசா" ஓவியம் லியானோ டாவின்சி என்பவரால் கி.பி 16ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டது. பிரான்ஸ் அரசுக்கு சொந்தமான பாரிஸ் நகரில் உள்ள லூவர் அருங்காட்சி சாலையில் மிகவும் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ள இது பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் பல மர்மங்களை மறைத்து வைத்திருக்கின்றது, மோனலிசா ஓவியத்தின் மிகவும் மர்மமான கூறுகளில் ஒன்றாக கூறப்படுவது அதன் ஆழமான புன்னகையை தான் அது மகிழ்ச்சியின் புன்னகையா அல்லது சோகத்தின் வெளிப்பட என்று கண்டுபிடிக்க முடியாத அளவு காணப்படுகிறது

குறிப்பாக இந்த ஓவியத்தை எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் பார்வையாளர்களை நேரடியாக நோக்கும் முகமாக வரையப்பட்டுள்ளது. பதினாறாம் நூற்றாண்டில் வரையப்பட்ட இந்த மோனலிசா ஓவியத்தை Microscope Magnification என்ற உயர்தர நுணக்குக்காட்டியைக் கொண்டு ஆராயும் பொழுது மோனலிசாவின் கண்களில் மிக நுண்ணிய எழுத்துக்கள் மறைக்கப்பட்டுள்ள தாக கண்டறியப்பட்டுள்ளது வலது கண்ணில் காணப்படும் LV என்ற நுண்ணிய எழுத்தானது இதனை வரைந்த லியானோ டாவின்சியைக் குறிப்பிடுவதாகவும் மற்றொரு கண்ணில் காணப்படும் CE என்ற எழுத் தானது எழுத்தானது எதனை குறிக்கிறது என்று இதுவரையில் மர்மமான ஒன்றாக உள்ளது. மிகவும் எளிதான வண்ணத்தில் தீட்டப்பட்ட ஓவியத்தில் மேலும் சில ரகசியங்கள் புதைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது

கிட்டத்தட்ட நான்கு வருடங்களா தொட ர்ந்து வரையப்பட்ட ஓவியம் உண்மையில் யாருடையது என்றும் காண முடியாத எழுத்துக்களும் எண்களும் எதற்காக இவ் ஓவியத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்ற கேள்விகளுக்கான பதிலை இன்று வரை முழுமையாக கண்டறிய முடியவில்லை என்பதே உண்மை.

## இணையமெனும் தங்கக்கூடு

அச்சம், மடம், நாணத்திற்குள் பூட்டி வைத்த
மொட்டுகள் இதழ்விரிக்கின்றது இணையத்தில் இன்று...
குனிந்த தலை நிமிராத பெண்ணியம் எல்லாம்
தலை குனியாமல் நிமிர்ந்து நிற்கிறது இணையத்தில்....

அடுப்பங்கரைக்குள் தான் வாழ்க்கையென்றிருந்தவள்
இணையத்திற்க்குள் கொண்டு வந்தாள் அடுப்பங்கரையை....
பெற்றோருக்கு மட்டுமே காட்டிய பரதத்தை
உலகமே கைக்கொட்ட ஆடுகிறாள் இணைய அரங்கில்....

மாப்பிள்ளை வீடு மட்டுமே பாடக்கேட்ட குரல்கள் எல்லாம்
இணையத்தின் வடங்களில் வட்டமிடுகின்றன...
பெண்ணாக இருந்து இணையத்திற்குள் வந்தவளை
வலைவீசி விழவைக்கும் சில வேடர்களை என்ன சொல்ல...

பெற்றவள் பெண்ணென்பதை மறந்தவர் கொண்டாடித்தீர்க்கும்
சிறு இச்சைக்குள் கசங்கிப்போகிறது பெண்ணவள் வாழ்க்கை...
இணையவழி உன் அடையாளத்தை தந்து
பயணவழி பாதகர்களை சேர்த்து விட்டாய் இன்று...

விழிப்பாய் இருக்க மறந்திடாதே பெண்ணே
பல விழிகள் பார்க்கிறது இணையத்தில் உன்னை....
சுதந்திரமாய் பறந்துவிட்டாலும் நினைவில் கொள் - நீ
சிறகு விரித்தது இணையமெனும் தங்கக்கூண்டில் தான்....

*ரொசானி சிங்கராசா*
*அல்-ஹிக்மா முஸ்லிம் மாகா வித்தியாலயம், குருணாகல்*

## வெற்றியின் தொடர்ச்சியில் ஆசான்

இற்றைப்படுத்தும் முயற்சியில் அடியெடுத்து
இன்றென்றே அதனை அடியிட்டிடு
சேவை மனப்பாங்கினை கொண்டிங்கு
சேர்ந்தே உன் பாங்கினை காட்டிடு.

நாளைய சமுதாயம் உன் கையிலென்று
நாணயத்துடன் உன் பணியாற்றிடு
ஆசான் என்னும் மேம்பணியை
ஆலயம் போன்று பேணிடு.

உன்கலை என்று மட்டும் நின்றிடாது
பல்கலையும் கற்று சிறந்திடு
ஆசான் சேவையின் அடித்தளத்திலே
பிற சேவைகளின் அறிவினை வழங்கிடு.

சவால்களை சந்தர்ப்பமாக்கிடு
சாதனைகள் பலவற்றை மாற்றிடு
மாணாக்கர் மாநிலமாய் மாறிட
மனம் வைத்து சேவை புரிந்திடு.

அர்ப்பணிப்பும் அரவணைப்பும் கொண்டிடு
கண்ணியம் தனை தன்வசம் வைத்திடு
மக்கள் சேவை மகேசன் சேவையென்று
மாணவர் சேவை மகத்தான சேவையென்றாற்றிடு.

*- றுபிதா மகேந்திரராசா -*

## கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it





☞ Click Here for Watch it





☞ Click Here for Watch it

நன்றி : DAN தமிழ் ஒளி

## பேசும் படங்கள்




Art by. M.J.F. Nasma



Art by. N.Ratheesa Banu

# குருசேத்திரம்

කුරුසේත්තිරම් Guruseththiram

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...**

**"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

- சிறுகதை
- தொடர்கதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியங்கள்

**தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.**

**சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.**

**சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)**

## குருசேத்திரம் உங்களின் களம்...

**அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

guruseththiram@gmail.com

www.guruseththiram.blogspot.com

– குருசேத்திரம் குழுமம் –